# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் – 29

# திரித்துவம் பற்றின ஆராய்ச்சி

பாகம்–3

# பரலோக பிதா




## The Study of Trinity Part - 3

## HEAVENLY FATHER

Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## திரித்துவம் பற்றின ஆராய்ச்சி பாகம்-3

# பரலோக பிதா

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே,

இப்போது மிகவும் முக்கியமான கட்டமாகிய திரித்துவம் பற்றின ஆராய்ச்சியின் மூன்றாம் பாகமாகிய பரமபிதா பற்றி வேதத்தில் நிதானமாக ஆராய்வோம்.

கடந்த பாடத்தில் நாம் பார்த்தபடி வேதத்தில் அநேகமுறை பிதா என்றும், தேவன் என்றும் வருகிறது. குறிப்பாக யோவான் சுவிசேஷத்தில் மாத்திரம் நம் கர்த்தர் 100க்கு மேலான முறை பிதா என அழைக்கின்றதைக் காணலாம்.

மேலும் வேதத்தில் திரித்துவமோ, திரித்துவக் கொள்கையோ அல்லது திரியேக தேவன் என்றோ ஒருமுறைகூட வருவதில்லை எனவும், பரிசுத்தஆவி தேவனுடைய வல்லமை என்றும், கர்த்தராகிய இயேசு தேவனுடைய குமாரன் என்றும் மிகவும் தெளிவாகப் பார்த்தோம். பரமபிதா பற்றி தெளிவாக அறிந்துகொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

வேதத்தில் நாம் பார்க்கிறபடி நமது கர்த்தரோ அல்லது அவருடைய சீஷர்களோ திரியேக தேவனுக்கு ஆராதனை செய்ததாகவோ அல்லது இந்த உபதேசத்தை உலகிற்கு கொண்டு சென்றதாகவோ எவ்வித ஆதாரமும் இல்லை. கிபி 4ம் நூற்றாண்டுவரை இந்த உபதேசம் சபையில் இல்லை என சபை சரித்திரங்களில் காணலாம்.

முதலில் கர்த்தருடைய விசுவாசம் பற்றியும், அவருடைய சீஷர்களின் விசுவாசம் பற்றியும் வேதத்தில் அறியவேண்டும்.

கர்த்தராகிய இயேசுவின் விசுவாசம்பற்றி ஆராயும்போது ஒரு சில வசனங்களை அவரே கூறுவதை இங்கு பார்க்கலாம்.

**மாற்கு 12:29** ‘இஸ்ரயேலே கேள். நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்” என்கிறார்

**மத்தேயு 4:10** ‘உன் தேவனாகிய கர்த்தரை பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக”

**மத்தேயு 6:9** ‘பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே”

**மத்தேயு 7:21** ‘பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே”

**யோவான் 5:37** ‘என்னை அனுப்பிய பிதா.. நீங்கள் ஒருக்காலும் அவர் சத்தத்தைக் கேட்டதுமில்லை. அவர் ரூபத்தை கண்டதுமில்லை

**யோவான் 14:28** ‘என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்”

**யோவான் 17:3** ‘ஒன்றான மெய்தேவனாகிய உம்மையும்”

**யோவான் 17:25,26** ‘நீதியுள்ள பிதாவே உலகம் உம்மை அறியவில்லை, நான் உம்மை அறிந்திருக்கிறேன்”

மேலும் சிலுவையில் அறையுண்டபோது முக்கியமான 2 வார்த்தைகளை பேசும்போது பிதாவைக் குறித்து பேசுகிறது. அவரைப்பற்றி எப்பேர்ப்பட்ட சத்தியத்தை வெளிப்படுத்துகிறார்.

அதாவது தனக்குமேல் ஒரு தேவன் இருக்கிறதை அவர் உறுதிப்படுத்துகிறார். இன்னும் அநேக வசனங்கள் உள்ளதை நாமே அறியமுற்படலாம்.

நம் கர்த்தர் மரித்து உயிர்த்தெழுந்தாதே. அவரே உயிர்த்தெழுந்து விட்டார் என அநேகர் நம்புகின்றனர். ஆனால் சீஷர்களுடைய விசுவாசம் என்ன?

**அப்போஸ்தலர் 2:32 இந்த இயேசுவை தேவன் எழுப்பினார். இதற்கு நாங்கள் எல்லோரும் சாட்சிகளாயிருக்கிறோம்"**

**அப்போஸ்தலர் 2:36 'நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார்"**

**1கொரிந்தியர் 8:5-7** ல் 'பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு" இந்த அறிவு எல்லோரிடத்திலும் இல்லை.

**2கொரிந்தியர் 1:3** 'நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவன்"

**2கொரிந்தியர் 11:31** 'நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவுமானவர்"

**எபேசியர் 1:17** 'நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர்"

**எபேசியர் 3:15** 'நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு"

இன்னும் சில வசனங்களையும் வாசித்தறியவும்
**எபேசியர் 1:3, கொலோசெயர்1:5, 1தீமோத்தேயு 2:5, 1தீமோத்தேயு 6:16, எபிரேயர் 5:5,7 எபிரேயர் 13:20, 1யோவான் 1:3, 1யோவான் 4:14, வெளிப்படுத்தல் 1:1, வெளிப்படுத்தல் 3:12 .**

ஆக சகோதர சகோதரிகளே, பிதாவாகிய தேவன் பற்றி இன்னும் தெளிவான அநேக வசனங்கள் இருக்கும்போது, யார் அந்த தேவன் அல்லது பிதா(அப்பா)? என தெரிந்து கொள்வதில் நம் அனைவருக்கும் இப்போது அதிக ஆர்வம் இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. அவரே நம் கர்த்தர் இயேசுவின் பிதாவும், அனைத்து தூதர்களின் பிதாவும், உலகில் ஆதாம் முதல் நம் அனைவரின் பிதாவுமாயிருக்கிறார் என்ற சத்தியத்தை அறியும்போது அவரைப்பற்றியும், அவருடைய குணநலன்கள் பற்றியும் தெரிந்துகொள்ள நமக்குள்ளான ஆர்வம் இன்னும் அதிகரிக்கின்றதே.

சீஷர்கள் தேவனுடைய பரிசுத்தஆவியைப் பெற்றபின்பு மிகுந்த தைரியத்துடனே உபதேசம் செய்ய ஆரம்பிக்கும்போது, அப்போஸ்தலர் 3:13ல், ஒரு முக்கியமான வசனத்தை கவனிக்கவேண்டும். சீஷர் பேதுரு கூறும்போது, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களுடைய தேவனாகிய நம்முடைய பிதாக்களின் தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை மகிமைப்படுத்தினார்.
இதன்படி ஆபிரகாம் போன்றவர்களின் தேவன் கர்த்தராகிய இயேசு என்றால் எவ்வாறு உண்மையாகும்?
ஆங்கில வேதாகமம் NIV -ல் பார்த்தால்,

“The God of Abraham, Issac and Jacob glorified his servant Jesus” என்று வருகிறது. ஆக ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களின் தேவனே, நம் கர்த்தருடைய தேவன் என்பதும் தெளிவாகிறது.

மேலும் ஆபிரகாம் போன்றவர்களின் தேவன் யார் என கண்டுபிடித்துவிட்டால் அவரே பரலோகப்பிதா என தைரியமாய் முடிவு செய்துவிடலாமல்லவா?

இதற்காக நாம் பழையஏற்பாட்டில் யாத்திராகமம் 6:2,3ல்(KJV) வாசித்தால்,

‘மேலும் தேவன் மோசேயை நோக்கி, நான் யேகோவா, சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தரிசனமானேன். ஆனாலும் யேகோவா என்னும் என் நாமத்தினால் நான் அவர்களுக்கு அறியப்படவில்லை”

இவரே நம் பிதா என்று கண்டுபிடிக்கும்போது, நம் உள்ளம் குதூகலிக்கிறதல்லவா? இவ்வளவு நாட்கள் நாம் அப்பாவின் பெயர் தெரியாமல் இருந்தோமா? ஏன்?

**2கொரிந்தியர் 4:4**

**‘தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்.**

யேகோவா என்ற தமிழ் வார்த்தை எபிரேய மொழியில் YHWH என உள்ளது. இஸ்ரயேலர்களால் இது ‘யாவே”YAHWEH என்று உச்சரிக்கப்படும். கிரேக்க மொழியில் அவருடைய நாமம்“JHVH” என்று மாறி, பிறகு உயிரெழுத்துக்கள் சேர்க்கப்பட்டுJEHOVAH எனப்படுகிறது.

யேகோவா என்றால் யாத்திராகமம் 3:14ல் ‘இருக்கிறவராகவே இருக்கிறேன். அதாவது தம்மில்தாமே ஜீவனுள்ளவர். எப்போதும் இருக்கிறவர் என்று பொருள்.

**யாத்திராகமம் 3:15**

**‘மேலும் தேவன் மோசேயை நோக்கி : ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாயிருக்கிற உங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினார் என்று நீ இஸ்ரயேல் புத்திரருக்குச் சொல்வாயாக. என்றைக்கும் இதுவே என் நாமம், தலைமுறை தலைமுறைதோறும் இதுவே என் பேர்ப்பிரஸ்தாபம்”**



மூல பாஷையில் இவ்வார்த்தை ஏறத்தாழ 7000 முறை வருகிறது. ஆனால் ஆங்கிலம் மற்றும் தமிழிலும் இவ்வார்த்தைக்கு பதிலாக தடித்த எழுத்துக்களில் கர்த்தர் என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

**யாத்திராகமம் 20:7** **'உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக "**

என்ற 3ம் கட்டளைக்கேற்ப இஸ்ரயேலர்கள் தேவனுடைய பரிசுத்தமும் கனமுமுள்ள பெயரை அடிக்கடி உச்சரிக்காமல் மிகுந்த பயபக்தியுடனே அதைப் பயன்படுத்தினர்.

ஆனால் தற்போது சில கிறிஸ்தவ பிரிவுகள் (யேகோவாவின் சாட்சிகள்) பிதாவின் நாமத்தை சாதாரணமான காரியமாக எண்ணி பயன்படுத்துகின்றனர். அந்த தவறான முன் உதாரணத்தை நாம் பின்பற்றாமல் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்.

இஸ்ரயேல் வல்லுநர்களால் கிமு 300களில் எபிரேயு மொழியில் இருந்த பழைய ஏற்பாடு கிரேக்கமொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டபோது (Septuagint version), அதில் 'யேகோவா"என்பதற்கு பதிலாக , தேவன், கர்த்தர்(God, Lord) என மொழிபெயர்க்கப்பட்டது. இதிலிருந்தே ஆங்கில மொழிபெயர்ப்பும்(KJV), இந்த ஆங்கில மொழிபெயர்ப்பிலிருந்தே நம் கையிலுள்ள தமிழ் வேதாகமமும் மொழிபெயர்க்கப்பட்டது. ஆனால்Revised version, American Standard version -களில் தேவனுடைய பெயர் எல்லா இடங்களிலும் போடப்பட்டுள்ளது. தமிழில் 8 இடங்களில் மட்டுமே தரப்பட்டுள்ளன. அவற்றை கீழே தருகின்றோம் :

**சங்கீதம் 83:17**

**'யேகோவா என்னும் நாமத்தையுடைய தேவரீர் ஒருவரே பூமியனைத்தின்மேலும் உன்னதமானவர் என்று மனுஷர் உணரும்படி.."**

**யாத்திராகமம் 6:2,3**

**'சர்வ வல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தரிசனமானேன். ஆனாலும் யேகோவா என்னும் என் நாமத்தினால் நான் அவர்களுக்கு அறியப்படவில்லை"**

**சங்கீதம் 68:4**

**'தேவனைப் பாடி, அவருடைய நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுங்கள். வனாந்தரங்களில் ஏறிவருகிறவருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள். அவருடைய நாமம் யேகோவா. அவருக்கு முன்பாகக் களிகூருங்கள்"**

**ஏசாயா 12:2,**

**'..கர்த்தராகிய யேகோவா என் பெலனும், என் கீதமுமானவர். அவரே எனக்கு இரட்சிப்புமானவர்"**

**ஏசாயா 26:4**

**'கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள். கர்த்தராகிய யேகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார்"**

**எரேமியா 33:2**

**'கர்த்தருமாயிருக்கிற யேகோவா என்னும் நாமமுள்ளவர் சொல்லுகிறது.."**

**எரேமியா 16:21**

**'என் நாமம் யேகோவா என்று அறிந்துகொள்வார்கள்"**

**ஓசியா 12:5**

**''யேகோவா என்பது அவருடைய நாமசங்கீர்த்தனம்"**

**சங்கீதம் 90:2 'பர்வதங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும், உலகத்தையும் உருவாக்குமுன்னும் நீரே அநாதியாய ' (Everlasting to Everlasting) என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்"**

தேவனுடைய அழியாமைக்குரிய சுபாவத்திலிருந்து அவருக்கு ஆதி என்பது இல்லை என்றறிகிறோம்.

**யோவான் 5:26** **'பிதாவானவர் தம்மில்தாமே ஜீவனுள்ளவராயிருக்கிறதுபோல்"**

**1தீமோத்தேயு 1:17** **'நித்தியமும் அழிவில்லாமையும்"**

எனும்போது எவ்வாறு தேவன் தோன்றினார்? என்றால் நம்முடைய குறைவான அறிவுக்கு அது எட்டாததாயிருக்கிறது.

உதாரணமாக வீட்டில் நாம் வளர்க்கும் நாய்க்கு ஒரு குறிப்பிட்ட அளவு அறிவு இருக்கிறது. ஆனால் அதே நாய்க்கு நட்சத்திரம் பற்றியும், விஞ்ஞானம் பற்றியும் விளக்கினால் அதற்குப் புரியுமா? அதேபோல மனிதருக்கு கூட அறிவு அளவிடப்பட்டிருக்கிறது. ஆகவே இன்று அநேக ஜீவன்கள் பற்றியும், பூமி பற்றியும் விண்வெளி பற்றியும் மனிதரால் கண்டுபிடிக்க முடியாதபோது, சர்வ வல்ல தேவனுடைய துவக்கம் பற்றி நம்மால் ஆராய முடியாது, அவரை கண்டுபிடிக்கவும்கூடாது என்று பார்க்கிறோம்.

**யோபு 37:22,24** **'சர்வ வல்லவரை நாம் கண்டுபிடிக்கக்கூடாது. அவர் வல்லமையிலும் நியாயத்திலும் பெருத்தவர்"**

**யோபு 36:26** **' இதோ தேவன் மகத்துவமுள்ளவர். நாம் அவரை அறியமுடியாது. அவருடைய வருஷங்களின் இலக்கம் ஆராய்ந்து முடியாதது"**

**ஏசாயா 44:6-8** **ல், ' நான் முந்தினவரும் நான் பிந்தினவருந்தானே" என்னைத்தவிர தேவன் இல்லை"**

சர்வ வல்ல தேவனாக நானே முதலும் கடைசியுமானர் என்றும், தாமே இரட்சகர் என்றும் பொருள்.

**ஏசாயா 45:5-6** **'நானே கர்த்தர் வேறொருவர் இல்லை. என்னைத் தவிர தேவன் இல்லை."**

**ஏசாயா 43:10,11** **'எனக்கு முன் ஏற்பட்ட தேவன் இல்லை, எனக்குப் பின் இருப்பதும் இல்லை. நான், நானே கர்த்தர், என்னையல்லாமல் இரட்சகர் இல்லை"**

இங்கும், இன்னும் சில வசனங்களின் மூலம் நாம் பார்க்கும்போது, பிதாவாகிய தேவன் மீட்பர்

**யோபு 19:25,** கன்மலை **ஏசாயா 26:4, இரட்சகர் ஏசாயா 43:11, மேய்ப்பர் சங்கீதம் 23:1** என்றெல்லாம் அழைக்கப்படுகிறார். அதேபோல இயேசுவுக்கும் இப்பெயர்கள் உள்ளதால் இவரே அவர் என அநேகர் நம்பிவிடுகின்றனர்.

ஆனால் **யோவான் 17:10ல், 'உம்முடையவைகள் என்னுடையவைகள்" என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள்"** என இயேசுவே சொல்லுகிறதை கவனிக்கவும்.

பிதாவாகிய தேவனுடைய சர்வ வல்லமையைப் பற்றி நாம் ஓரளவு தெரிந்துகொள்ளவேண்டும்.

**சங்கீதம் 147:4-5**

**'அவர் நட்சத்திரங்களின் இலக்கத்தை எண்ணி அவைகளுக்கெல்லாம் பேரிட்டு அழைக்கிறார்.அவருடைய அறிவுஅளவில்லாதது"**

**யோபு 38:31,32**

**'அறுமீன் நட்சத்திரத்தின் சுகிர்த சம்பந்தத்தை நீ இணைக்கக்கூடுமோ, அல்லது மிருக சீரிஷத்தின் கட்டுகளை அவிழ்ப்பாயோ? இராசிகளை அதினதின் காலத்திலே வரப்பண்ணுவாயோ? துருவச் சக்கர நட்சத்திரத்தையும் அதைச் சேர்ந்த நட்சத்திரங்களையும் வழி நடத்துவாயோ?"**



அன்பானவர்களே, பரலோகப் பிதா இங்கு நட்சத்திரக் கூட்டங்களையும், மண்டலங்களையும் குறித்து பேசுகிறார். இதுபற்றி விஞ்ஞானத்தின்மூலம் அறிந்துகொள்ளலாம். நட்சத்திரங்கள் என்றால் நம் கண்ணிற்கு வானத்தில் தெரிகிறதே அவ்வளவுதானா? அவைகளையே நம்மால் எண்ணமுடியுமா? நாம் பார்ப்பது விண்வெளியில் ஒரு துளி மட்டுமே.

நாம் இருக்கும் இப் பால்வெளி மண்டலத்தில்(Galaxy - Milky way)பில்லியன்(நூறு கோடி) நட்சத்திரங்களும்(அனைத்தும் நம் சூரியனைப்போல் இருக்கும்). அவை ஒவ்வொன்றிற்கும் கிரகங்களும், சந்திரன்களும் உள்ளன. இது ஒரு பால்வெளிமண்டலம்.

**பால்வெளி மண்டலம் - சூரியக் குடும்பம்**






இதன் (குறுக்கு) மொத்த தூரம் 1,00,000 ஒளி ஆண்டுகள் ஆகும். ஒரு ஒளி ஆண்டு என்றால் என்ன? அதாவது ஒளியானது ஒரு வருடத்திற்கு பயணம்செய்யும் தூரம் ஆகும். அதாவது ஒளி ஒரு நொடிக்கு 1,86,000 மைல் செல்கிறது. ஆக, ஒளி ஆண்டு என்பது

1,86,000 X 60 X 60X 24 X 365 = 5,865,696,000000 மைல்(5.86 டிரில்லியன் மைல்)

மேலும், நம்முடைய சூரியனுக்கும், மற்றொரு சூரியனுக்கும் உள்ள தூரம்.24ஒளி ஆண்டுகள் ஆகும். யோசித்துப் பாருங்கள். இதுபோல 1500 கோடி பால்வெளி மண்டலங்கள் தேவனால் உண்டாக்கப்பட்டிருக்கிறதை அறியும்போது நம்மால் புரிந்துகொள்ளமுடிகிறதா?

ஆக நம்முடைய சூரியனில் ஏறத்தாழ 10 லட்சம் பூமியை போடமுடியும். ஆனால் இப் பால்வெளி மண்டலத்தில் இச்சூரியன் ஒன்றுமில்லை. ஆக பூமியும் அதிலுள்ள மனிதர்களும் பிதாவாகிய தேவனுக்கு முன்பாக எவ்வாறிருக்கிறது என்றால்

ஏசாயா 40:15 **'இதோ ஜாதிகள் ஏற்றச்சாலில் தொங்கும் துளிபோலவும் , தராசிலே படியும் தூசிபோலவும் எண்ணப்படுகிறார்கள். இதோ தீவுகளை ஒரு அணுவைப்போல் தூக்குகிறார்".**



**'ஏற்றச்சாலில் தொங்கும் துளிபோல"** -நாம் அன்றாடம் துணி சலவை செய்தபிறகு, ஏற்றச் சாலானது(வாளி) கழுவப்பட்டு, ஒரு மூலையில் கவிழ்த்து வைக்கப்படும். நாம் கவனமாய்ப் பார்த்தால், சிறு சிறு தண்ணீர்த் துளிகள் அதிலிருப்பதை காணலாம். அது அந்த நபலால் ஒரு பொருட்டாக எண்ணப்படாமலே போகிறது.



**'தராசிலே படியும் தூசி** "- மார்க்கெட் போன்ற பகுதிகளில் அன்றாடம் பயன்படுத்தும் தராசுத்தட்டு காலி செய்யப்பட்டாலும், அதிலுள்ள தூசியை யாரும் பொருட்படுத்துவதில்லை.
அதுபோல கர்த்தரும் அவருடைய அநேக சிருஷ்டிகளைக் கொண்ட அண்டத்தோடு, பூமியையும் அதின் ஜனங்களையும் ஒப்பிடுகிறார்.

வசனம் 17ல் சகல ஜாதிகளும் அவருக்கு முன்பாக ஒன்றுமில்லை

சங்கீதம் 19:1-6ல் **'வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது"**

இன்னும் அநேக வசனங்கள் உள்ளன. அன்பானவர்களே தேவன் பற்றி ஒரு சிறுதுளி தெரிவதே நம்மை பிரமிக்கச் செய்யும்போது, எல்லாவற்றையும் அறிந்தால்?

கற்பனைக்கெட்டாத , யோசித்துப் பார்க்கமுடியாத அவருடைய சர்வவல்லமைக்கு முன்பாக நாம் எந்தளவு பயபக்தியாயிருக்கவேண்டும்.

சங்கீதம் 111:9 / 145:3 **'அவருடைய நாமம் பரிசுத்தமும் பயங்கரமுமானது (Reverance).. அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது"**

ஏசாயா 40:25,26 **'இப்படியிருக்க என்னை யாருக்கு ஒப்பிடுவீர்கள்?எனக்கு யாரை நிகராக்குவீர்கள்? என்று பரிசுத்தர் சொல்லுகிறார்"**

கற்பனைக்கெட்டாத அவருடைய பெலன் சர்வ வல்லமை உள்ளது. ஒருவரும் தேவனுடைய

திட்டங்களை எதிர்க்கவோ, முறியடிக்கவோ முடியாது.

**ஏசாயா 14:24 / 46:10**

**'நான் நினைத்திருக்கிறபடியே நடக்கும், நான் நிர்ணயித்திருக்கிறபடியே நிலைநிற்கும் என்று சேனைகளின் கர்த்தர் ஆணையிட்டுச் சொன்னார்"**

**'அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகால முதற்கொண்டும் அறிவிக்கிறேன். என் ஆலோசனை நிலைநிற்கும். எனக்கு சித்தமானவைகளையெல்லாம் செய்வேன் என்று சொல்லி.."**

பூமியில் காணப்படுகிற தீமைகள், விரோதங்கள் அனைத்தும் அவரது அனுமதியின்படியே நடக்கிறது -

**ஏசாயா 45:7**

**'ஒளியைப் படைத்து இருளையும் உண்டாக்கினேன். சமாதானத்தைப்படைத்து தீங்கையும் உண்டாக்குகிறவர் நானே. கர்த்தராகிய நானே இவைகளையெல்லாம் செய்கிறவர்"**

காணமுடியாத தேவனை எவ்வாறு மனிதன் அறிந்துகொள்ளமுடியும்? வெளிப்படுத்தல் 4ம் அதிகாரத்தில் அடையாள மொழியில் தேவனுடைய குணநலன்களைப்பற்றி கூறப்பட்டுள்ளது.

**வெளிப்படுத்தல் 4:2,6,7**

**'வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது. அந்த சிங்காசனத்தின்மேல் ஒருவர் வீற்றிருந்தார். அந்த சிங்காசனத்தின் மத்தியிலும் அதைச் சுற்றிலும் நான்கு ஜீவன்களிருந்தன. முதலாம் ஜீவன் சிங்கத்துக்கொப்பாகவும், இரண்டாம் ஜீவன் காளைக்கொப்பாகவும், மூன்றாம் ஜீவன் மனுஷமுகம் போன்ற முகமுள்ளதாகவும், நான்காம் ஜீவன் பறக்கிற கழுகுக்கு ஒப்பாகவுமிருந்தன"**

**சிங்காசனத்தின் மத்தியிலும**் - இது தேவனுக்குள் இருக்கும் ஒன்றைக் குறிக்கிறது

**சிங்காசனத்தைச் சுற்றிலும**் - தேவனை சுற்றியிருப்பவைகளுக்குள் இருக்கும் ஒன்று.



தேவனுக்குள் இருக்கும் குணநலன்களையே இது வெளிப்படுத்துகிறது. இதுபற்றி விரிவாக பின்பு ஆராயலாம்.

வசனம் 7ல் கூறப்பட்டுள்ள இந்த நான்கு ஜீவன்கள் தேவனுடைய நான்கு குணநலன்களை வெளிப்படுத்துகிறது. இவை அவருடைய எல்லாக் கிரியைகளிலும், சிருஷ்டிகளிலும் வெளிப்படுகிறது.

## குணலட்சணம் 1

**'முதலாம் ஜீவன் சிங்கத்துக்கொப்பாக இருந்தது"**



இங்கு சிங்கம் என்பது வல்லமையைக் குறிக்கிறது. உண்மையாகவே தேவன் சர்வ வல்லமையுள்ளவர். அதாவது சிருஷ்டிப்பு மற்றும் ஜீவன் தரும் வல்லமையைக் குறிக்கிறது. சகலத்தையும் வெறுமையிலிருந்து உருவாக்கி, ஜீவனற்றதை ஜீவனுள்ளதாக
மாற்றுகிறார்

**சங்கீதம் 36:9 'ஜீவ ஊற்று உம்மிடமிருக்கிறது.
உம்முடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிறோம்"**

## குணலட்சணம் 2

**'இரண்டாம் ஜீவன் காளைக்கொப்பாக இருந்தது"**



இது தேவனுடைய நீதியைக் குறிக்கிறது. இந்த அடையாளம் இஸ்ரயேலருடைய பாவ நிவாரண பலியிலிருந்து எடுக்கப்படுகிறது. தேவனுடைய தனித்தன்மையானது பரிசுத்தமும் பூரணமும் உள்ளடக்கியது

**சங்கீதம் 89:14 'நீதியும் நியாயம் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம்.
கிருபையும் சத்தியமும் உமக்கு முன்பாக நடக்கும்"**

## குணலட்சணம் 3

**'மூன்றாம் ஜீவன் மனுஷமுகம் போன்ற முகமுள்ளதாக இருந்தது"**



இது அவருடைய அன்பைக் குறிக்கிறது. ஏனெனில் மனிதனை தம் சாயலில் படைத்தார்

**1யோவான் 4:8 'அன்பில்லாதவன் தேவனை அறியான்.
தேவன் அன்பாகவே இருக்கிறார்"**

தேவன் தம் ஒரே பேரான குமாரனை உலகிற்கு அனுப்பினதிலிருந்து தேவ அன்பு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.



## குணலட்சணம் 4

**'நான்காம் ஜீவன் பறக்கிற கழுகுக்கு ஒப்பாகவுமிருந்தன"**

இது தேவனுடைய அளவில்லா ஞானத்தைக் குறிக்கிறது. அறிவு, திட்டம் வகுத்தல், முன்கூட்டியே அறிதல் ஆகியவற்றை உள்ளடக்கியது. இது வேதாகமத்தில் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரைக்கும் அவரது மனுக்குலத்திற்கான தெய்வீகத் திட்டத்தில் வெளியாக்கப்பட்டுள்ளது

'அந்த நான்கு மிருக ஜீவன்களுக்கு முன்புறத்திலும் பின்புறத்திலும் கண்களால் நிறைந்திருந்தன" - இது தேவனுடைய வல்லமை நீதி அன்பு மற்றும் ஞானமானது அளவிடப்படாததும் நிரந்தரமாயுள்ளதையும் குறிக்கிறது.

மேலும் இதே நான்கு குணலட்சணங்களையும் தேவன் மனிதனுக்குள் வைத்திருப்பதை பின்வரும் வசனங்களில் வாசிக்கிறோம்.

**ஆதியாகமம் 1:26,27** **'பின்பு தேவன்.. நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக. அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும் , பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்"**

நமது சாயலாக என்பது பிதா மற்றும் குமாரனின் சாயலாக மனுஷனை சிருஷ்டித்ததைக் கூறுகிறார். பாவம் மற்றும் சுயநலம் அந்த சாயலை சீரழித்திருந்தாலும், இன்னும் அவைகளை மனிதனுள் காணமுடிகிறது

**வல்லமை** : மனிதனுடைய கிரியைகளை கவனிக்கும்போது, பிரமாண்டமான கட்டிடங்கள், உற்பத்தி, போக்குவரத்து சாதனங்கள், விஞ்ஞானம் போன்றவைகளை வேறு எந்த சிருஷ்டியும் செய்யமுடியாது.

**நீதி** : நாம் காணும் இன்றைய நீதிமன்றங்கள் சுயநலம், பொய்யினால் சீரழிக்கப்பட்டாலும். நீதியின் குணலட்சணங்களைக் காணமுடிகிறது.

**அன்பு** : சுயநலத்தினால் வெகுவாக அழிந்திருந்தாலும்இன்னும் அன்பு மனிதனிடையே காணப்படுகிறது. உதாரணம் : 2005ல் சுனாமி நிவாரண நிதிக்காக உலகம் முழுவதும் எடுக்கப்பட்ட முயற்சிகள்

**ஞானம்** : கட்டிடக் கலை, வேதியியல், இயற்பியல், உயிரியல், மருத்துவம், பொறியியல், தாவரவியல், கணிதம், தொழிற்கல்வி ஆகிய துறைகளில் மனிதன் பெற்றிருக்கும் ஞானமானது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

மேலும் பிதாவின் குணலட்சணங்களைக் குறித்து நாம் வாசிக்கையில்,

**எசேக்கியேல் 1:16**

**'அவைகளின் ரூபமும் அவைகளின் வேலையும் சக்கரத்துக்குள் சக்கரம் இருக்குமாப்போல் இருந்தது"**

சக்கரத்துக்குள் சக்கரம் - தேவனுடைய குணநலன்கள் ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்தவை. இங்கு நான்கு சக்கரங்களும் ஒன்றுக்குள் ஒன்றாக இருப்பதுபோல், தேவனுடைய நான்கு குணலட்சணங்களும் செயல்படுவதைக் குறிப்பிடுகிறது.

தேவனின் பரிசுத்த நாமத்தை துதிப்பதற்கென ஒரு முழு சங்கீதமும் இருக்கிறது -

**சங்கீதம் 145:8-13** **' கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர். கர்த்தர் எல்லார்மேலும் தயவுள்ளவர். அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகளின்மேலுமுள்ளது. கர்த்தாவே உம்முடைய கிரியைகளெல்லாம் உம்மைத் துதிக்கும். உம்முடைய பரிசுத்தவான்கள் உம்மை ஸ்தோத்தரிப்பார்கள். மனுபுத்திரருக்கு உமது வல்லமையுள்ள செய்கைகளையும், உமது ராஜ்யத்தின் சிறந்த மகிமைப்பிரதாபத்தையும் தெரிவிக்கும்படிக்கு உமது ராஜ்யத்தின் மகிமையை அறிவித்து, உமது வல்லமையைக் குறித்துப் பேசுவார்கள். உம்முடைய ராஜ்யம் சதாகாலங்களிலுமுள்ள ராஜ்யம், உம்முடைய ஆளுகை தலைமுறை தலைமுறையாகவும் உள்ளது"**

இப்பேர்ப்பட்ட தேவனை நாம் பிதாவாக கொண்டுள்ளது எவ்வளவு பாக்கியம்

**சங்கீதம் 33:12**ல் **யேகோவாவை தெய்வமாகக் கொண்டிருந்த ஜனங்கள் பாக்கியமுள்ளது** என்று பார்க்கிறோம்.

"Blessed is the Nation whose God is JEHOVAH" - Revised version

**அப்போஸ்தலர் 17:27** **' கர்த்தராகிய தம்மை தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாக.."**

இவரை நாம் அவருடைய வேதத்தில் தடவியாகிலும் கண்டுபிடிக்கவேண்டும்

ஆயிர வருட அரசாட்சியின் பிரதான வேலையே பிதாவாகிய தேவனை அனைத்து மனுக்குலமும் அறியச்செய்வதாகும்.

**ஏசாயா 11:9** **' சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல பூமி யேகோவாவை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்"**

பின்பு **வெளிப்படுத்தல் 5:13ல், 'சகல சிருஷ்டியும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் சதா காலங்களிலும் ஸ்தோத்திரம் உண்டாவதாக என்பார்கள்"**

வேதத்தில் திரித்துவம் என்ற வார்த்தை கிடையாது. ஆனால் உலகமே இதை ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால் தேவனுடைய பெயர் வேதத்தில் தெளிவாக உள்ளது. ஜனங்கள் இது குறித்து மிகவும் சந்தேகமடைவது ஆச்சரியத்துக்குரிய விஷயமே.

**நீதிமொழிகள் 30:4**

**'வானத்துக்கு ஏறியிறங்கினவர் யார்? காற்றைத் தமது கைப்பிடிகளில் அடக்கினவர் யார்? தண்ணீர்களை வஸ்திரத்திலே கட்டினவர் யார்? பூமியின் எல்லைகளையெல்லாம் ஸ்தாபித்தவர் யார்? அவருடைய நாமம் என்ன? அவர் குமாரனுடைய நாமம் என்ன? அதை அறிவாயோ?"**

இந்த வசனம் இரண்டு நபர்களைக் குறித்துப் பேசுகிறது. அவருடைய நாமம் என்ன? அவருடைய குமாரனின் நாமம் என்ன என்று கேள்விகளும் கேட்கிறது.

**அவருடைய நாமம் - சர்வ வல்லமையுள்ள யேகோவா**

**அவருடைய குமாரனின் நாமம் - ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து**

நாம் இந்த இரண்டு நாமங்களையும் அறியும் பாக்கியத்தை தேவன் தம் மட்டற்ற கிருபையினாலும் இரக்கங்களினாலும் கொடுத்ததால் இன்று நாம் அதை அறிந்துகொண்டோம்.

**தேவன் தாமே தொடர்ந்து நம்மை வழிநடத்துவாராக ஆமென்.**

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/bibleresearch/